# சம்ஸ்கிருத மொழியும் சர்வதேச வலைப்பின்னலும்–ஓர் ஆய்வு

சு. நவநீதகிருஷ்ணன்

**ஆய்வுச்சுருக்கம்**

*(சம்ஸ்கிருதமொழி இறந்தமொழி அல்ல. அது செம்மொழியாக வாழும் மொழி, பல்வேறு மொழிகளும் வளம்மிக்க சம்ஸ்கிருதமொழியுடன் தம்மைத் தொடர்புபடுத்திப் பெருமை பெற்று வரும் இன்றைய காலகட்டத்தில் தமிழ்மொழிமூலம் தெளிவாக ஆராயப்பட வேண்டிய சம்ஸ் கிருத மொழிப்புலங்களை இனங்காட்டி நிற்கும் குறிகாட்டிகளை அறிமுகம் செய்ய முயல்வதுடன் இணையத்துடனான சம்ஸ்கிருதத்தின் புதிய போக்குகளையும் இக்கட்டுரை அறிமுகம் செய்கிறது.)*

**சம்ஸ்கிருத மொழி - அறிமுகம்**

மனித வரலாற்றில் சிந்தனை முதிர்ச்சியின் விளைவால் ஏற்பட்ட கருத்துப்பரிமாற்றமே மொழிகளின் தோற்றுவாயென்ற சிந்தனை இன்று பலராலும் முன்வைக்கப்படுகிறது. மனித வாழ்வுடன் பின்னிப்பிணைந்த மொழி வெறும் பரிமாற்று ஊடகமாக மட்டுமன்றி வேறு பல பண்பாட்டு விழுமியங்களையும் வாழ்வியற் கோலங்களையும் காலக்கண்ணாடியாகக் காட்ட வல்ல மனித வாழ்வின் பிரிக்கமுடியாத அம்சமாக மாறி வந்துள்ளமையை வரலாறு எமக்கு உணர்த்துகிறது. இவ்வகையில் உலகின் புராதன மொழிகளுள் ஒன்றான சம்ஸ்கிருதம் இந்தியாவைத் தனது தாய்நாடாகக் கொண்டிருந்த போதிலும் உலகின் பல நாடுகளிலும் பரந்து விளங்கும் சிறப்புடையது. சுமார் நாலாயிரம் ஆண்டுகால இலக்கியவளமும், தொன்று தொட்டு இன்று வரை அழியாத ஜீவசக்தியும், தெய்வீகதொடர்புடன் கூடிய தோற்றமும் இதன் பெருமையை எமக்குணர்த்தும்.[1] மேலும் இம்மொழி பிராகிருதமொழி, வைதிகமொழி, இதிஹாஸமொழி, பாணியால் செம்மைப்படுத்தப்பட்ட சம்ஸ்கிருதமொழி என்ற படிமுறையில் காலத்திற்கேற்ப புதிய பரிமாணங்களைப் பெற்று வருவதும் நன்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**சம்ஸ்கிருதத்தின் ஜீவசக்தி**

உலகின் பழைமைமிக்க மொழிகள் பலவற்றுள் சிலவே காலவெள்ளத்திலே அடித்துச் செல்லப்படாது நின்று நிலைத்திருக்கும் ஜீவசக்தி மிக்கவையாக உள்ளன. அவற்றுள் ஒன்றாகக் கூறத்தக்கது சம்ஸ்கிருதமொழி. மக்களால் பேசப்படும் மொழியே வாழும் மொழி என்ற கருத்து எளிதில் ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று. ஏனெனில் பழைமைமிக்க கட்டுக்கோப்பான பல்துறைசார் இலக்கியங்களைக் கொண்ட ஒருமொழி சமகாலத்திலும் பயிலப்படும் ஒரு மொழியாகவும் சமயதத்துவரீதியில் ஆலய நிகழ்வுகளுக்குரிய ஊடகமாகவும் பல்கலைக் கழகங்கள் பலவற்றின் பட்ட, பட்டப்பின் ஆய்வுக்குரிய மொழியாகவும் உலகம் பரந்த பல மொழியூடகங்களையும் பருவ இதழ்களையும் அலங்கரிக்கும் மொழியாகவும் தகவல் தொழில்நுட்ப அறிவியல் வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் மொழியாகவும் மனித பண்பாட்டு வளர்ச்சியில் செல்வாக்குமிக்க பண்பாட்டு மொழியாகவும் குறித்த சிலரின் தாய்மொழியாகவும் விளங்குமாயின் அம்மொழி இயல்பாக வாழும் மொழி என்ற தகுதியைப் பெற்றிருப்பதாகக் கருதுவதில் தவறேதுமில்லை. இவ்வகையில் சம்ஸ்கிருத அறிஞர்கள் பலர் இக்கருத்துடன் உடன்பாடு உடையவர்களாகவே உள்ளனர்.